**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

**முன்னிலை : திருமதி.எ..சுவேதா,** B.B.A., L.L.B (Hons)

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் திங்கட்கிழமை**

***அசல் வழக்கு 34/2021 ல் இடைமனு எண் . 24/2026***

அசோகன் ,..... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

ராமலிங்கம் ...... எதிர்மனுதாரர்/ வாதி

மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு என் முன்னர் கடந்த 11.6.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.புவனேஷ்வரி அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சி.ராமராஜன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும் இதுநாள்வரை என்னுடைய பிரசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,,,,,,,,,

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் 8 விதி 9 ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக் கொள்ள தாக்கல் செய்த மனு.

<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்-</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும் எதிர்மனுதாரர் வாதி என்றும், இந்த எதிர்மனுதாரர் மனுதாரர் மீது விளம்புகை, சொத்து சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்து வழக்கு விசாரணை நிலையில் உள்ளதாகவும், மனுதாரர் கூலி வேலை காரணமாக கேரளாவிற்கு சென்றுவிட்ட காரணத்தினால் தனது வழக்கறிஞரை சந்தித்து எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட பிராதிற்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும் இத்தகைய காரணமின்றி வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருந்துவிடவில்லை என்றும் கூடுதல்

எதிர்வழக்குரையை ஏற்றால்தான் அசல் வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சிகள் ஏற்படும் என்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக் கொள்ள மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்-

மனுதாரர்கள் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது மற்றும் பொய்யானது என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை அல்ல என்றும் அவைகளை எதிர்மனுதாரர் மறுப்பதாகவும் அவைகளுக்கு Reply Statement தாக்கல் செய்யும் உரிமையையை நிலைநிறுத்தி கொள்வதாகவும் இந்த மனுதாரருக்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் நீதிமன்றம் வழங்கியும் வேண்டுமென்றே காலம் கடந்த வழக்கை காலம் கடத்தும் கெட்ட நோக்கத்தோடு இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4, இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதேயாகும்.

6. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது விளம்புகை, சொத்து சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாவா தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்கு விசாரணை நிலையில் உள்ளதாகவும் மனுதாரர் கூலி வேலை காரணமாக கேரளாவிற்கு சென்றுவிட்ட காரணத்தினால் தனது வழக்கறிஞரை சந்தித்து எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட பிராதிற்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும் இத்தகைய காரணமின்றி வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருந்துவிடவில்லை என்றும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றால்தான் அசல் வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சிகள் ஏற்படும் என்று குறிப்பிட்டு மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை செய்தாலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரர் தரப்பில் சில அம்சங்களை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிப்பது அவசியமான ஒன்று என்றும் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறப்பட்ட சங்கதிகள் உண்மையானதா? இல்லையா? என்பதை அசல் வழக்கின் விசாரணை முடிவில் தெரியவரும். இம்மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு பாதிப்பேதும் இல்லை. அசல் வழக்கில் விசாரணை ஆரம்பிக்காத நிலையில் இம்மனு தாக்கல் செய்திருப்பதால் இம்மனுவினை அனுமதித்து நடத்துவதுதான் நீதிக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது,

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- E.Swetha)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்